# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 266/2024

**Date** : 19.11.2025 **PW 1/LW1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனலட்சுமி | ஆதார் எண் | |
| கணவர் பெயர் | சுரேஷ் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | ஆரியநத்தம் | வயது | 30 |
| எதிரிகள் 2 முதல் 9 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் ஆரியநத்தம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அவர்கள் எனது மாமனாரின் உறவினர்கள். 2, 3, 5, 6 எதிரிகள் எனது மாமனாரின் தம்பி மகன்கள். எதிரி 4 பரமசிவம் எனது மாமனாரின் சித்தப்பா மகன். எதிரி சகுந்தலா, பூபதி எனது மாமனாரின் தம்பி மனைவிகள். எதிரி ரீனா 2 வது எதிரி ஆனந்தனின் மனைவி. இந்நிலையில் கடந்த 26.04.2021 ஆம் வருடம் மதியம் 1.30 மணியளவில் நானும் எனது மாமனார் மணியும் எங்கள் ஊரில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்திற்கு நாங்கள் பயிர் செய்து வரும் நிலத்திற்கு வாய்தா செலுத்துவதற்காக சென்ற போது அங்கு இருந்த கிராம நிர்வாக அலுவலர் 2 வது எதிரி ஆனந்தனிற்கு போன் செய்து அங்கு வரவைத்தார்கள். அப்போது ஆனந்தனுடம் 1, 3 முதல் 9 எதிரிகளும் அங்கு வந்தார்கள். அப்போது எனது மாமனார் மணி கிராம நிர்வாக அலுவலரிடம் நாங்கள் பயிர் செய்து வரும் நிலத்தினை எங்களுக்கு தெரியாமல் பட்டா எப்படி மாற்றலாம் என கேட்டார். அப்போது எதிரி செல்வம் எனது மாமனாரை இரும்பு கம்பியால் தலையின் முன்பகுதியில் அடித்தார். அதனால் தலையில் இருந்து இரத்தம் வடிந்தது. எதிரி சங்கர், இளையபெருமாள் ஆகிய இருவரும் செங்கல்லால் எனது மாமனார் மணியை முதுகு மற்றும் மார்பில் அடித்தார்கள். அப்போது அங்குவந்த எனது கணவர் சுரேஷை எதிரி ஆனந்தன் இரும்பு கம்பியால் தலையின் பின் பகுதியில் அடித்தார். எதிரி பரமசிவம், இளையபெருமாள், சக்கரை ஆகியோர் செங்கல், கட்டையால் எனது கணவர் சுரேஷை முதுகு மற்றும் உடலில் அடித்தார்கள். எதிரிகள் சகுந்தலா, பூபதி மற்றும் ரீனா ஆகிய மூவரும் **என்னை தேவிடியா,**

**தேவிடியா பையா, ஊர ஓத்தவ, ஒக்கால ஓழி** என ஆபாசமாக திட்டினார்கள். அப்போது எனது நாத்தனார் அனிதா வந்து மறித்து கேட்டபோது எதிரிகள் சகுந்தலா, பூபதி மற்றும் ரீனா ஆகிய மூவரும் அனிதாவை முடியை இழுத்து கீழே தள்ளி கல் மற்றும் கழியால் அடித்தார்கள். எதிரிகள் எங்களை பார்த்து இதற்கு மேல்நிலத்திற்கு சென்றால் உங்களை கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தனர். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் நானும் எனது மாமனார் மணி எனது கணவர் சுரேஷ், எனது நாத்தனார் அனிதா உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக் குசிகிச்சைக்கு சென்றோம். எனது மாமனார் மற்றும் எனது கணவர் 1 வாரம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தனர். நான் மருத்துவமனையில் இருந்து காவல் நிலையம் சென்று சம்பவ தினத்தன்றே மாலை 4.00 மணியளவில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் என்னால் கொடுக்கப்பட்டது தான். இந்த புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த புகார். அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. ஆஜர் எதிரிகளின் தந்தையான எதிரி 1 சக்கரையும் எனது மாமனார் மணியும் உடன்பிறந்த அண்ணன் தம்பிகள் என்று சொன்னால் சரிதான். அவர்கள் சொத்துக்களை வாய்மொழியாகவும் பாகபிரிவினை பிரித்தும் சொத்துக்களை ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்குள் உள்ள சொத்து விவரங்கள் தொடர்பான பிரச்சனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்களுக்குள் சொத்து எப்போது பிரித்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. VAO அலுவலகத்திற்கு நானும் எனது மாமனார் மணி மட்டும் தான் சென்றிருந்தோம் என்று சொன்னால் சரிதான். VAO பெயர் என்னவென்றால் விமல் ஆகும். சொத்து பற்றி VAO-விடம் எனது மாமனார் மணி விசாரித்தபோது அவரை பொறுமையாக இருக்க சொல்லி எதிரிகளை VAO அலுவலகம் வருமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். VAO-வின் தூண்டுதலின் பேரில் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வந்ததாக எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். VAO அலுவலகத்திற்குள் எங்கள் இரு தரப்பினர்களுக்கும் வாக்குவாதம் நடைபெற்ற போது VAO பிரச்சனைக்கான பரிகாரத்தை நீதிமன்றத்திலோ அல்லது கோட்டாட்சியர் மூலமாகவோ பெருமாறு எங்களை அலுவலகத்தில் இருந்து அனுப்பிவிட்டார் என்று சொன்னால் அது சரியல்ல. அவர்

இருத்தரப்பினரையும் வெளியே செல்லுமாறு கூறிவிட்டு அலுவலகத்தை பூட்டிவிட்டு சென்றுவிட்டார்.

2. எதிரிகளுக்கும் எங்கள் தரப்பில் நானும், எனது மாமனாருக்கும் வாக்குவாதம் அலுவலகத்திற்கு வெளியே நடைபெற்று கொண்டிருந்தபோது எனது கணவர் சுரேஷ் சம்பவ இடத்திற்கு வந்தார். சண்டை எங்கு நடைபெற்றது என்றால் VAO அலுவலகத்திற்கு முன்னரும் கோவிலிற்கும் எதிரே உள்ள பொதுவெளியில் சண்டை நடைபெற்றது. VAO அலுவலகம் அமைந்துள்ள உளுந்தூர்பேட்டை - சேந்தநாடு ரோட்டில் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் இருக்கும் என்று சொன்னால் அது சரிதான். சண்டை நடைபெற்று கொண்டிருந்தபோதே எனது உறவினர்களான எனது நாத்தனார் அனிதா மற்றும் அவரது கணவர் ஆறுமுகம் சம்பவ இடத்திற்கு வந்தனர் என்று சொன்னால் அது சரிதான். அவர்கள் எதிரிகள் என்னை அடிக்காதவாறு மறித்தனர். சம்பவ இடத்தை சுற்றி வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அங்கு பொது மக்களும் இருந்தனர். சண்டை நடைபெற்ற போது சண்டையை பொது மக்கள் யாரும் மறிக்கவில்லை என்று சொன்னால் அது சரிதான். சண்டை மதியம் 1.30 மணியளவில் நடைபெற்றது. சுமார் 3.00 மணியளவில் நானும் எனது கணவர் சுரேஷ், மாமனார் மணி, நாத்தனார் அனிதா ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகசென்றோம். எனது மாமனார் மணியும், எனது கணவர் சுரேஷும் 1 வார காலம் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். நாங்கள் சிகிச்சைக்கு சென்ற நேரமானது கொரானா தொற்றுகாலம் என்று சொன்னால் அது சரிதான். எனது மாமனாரும் எனது கணவரும் 1 வார காலம் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளும் அன்றைய தினம் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நான் சம்பவம் தொடர்பாக திருநாவலூர் காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் அன்றைய தினமே மாலை சுமார் 4.00 – 4.30 மணி போல் இருக்கும். புகாரை நான் என் கைப்பட எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சம்பவத்தை பற்றி கூற என் அருகில் இருந்த நபர் ஒருவர் எனக்காக எழுதி கொடுத்தார். நான் புகார் கொடுத்த அன்று போலிசார் புகார் பதிந்ததற்கான ரசீது ஏதேனும் என்னிடம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். நான் புகார் கொடுத்ததன் அடிப்படையில் என்னை போலிசார் விசாரணை செய்து எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்தனர் என்றார் அது சரிதான்.

4. நான் புகார் கொடுத்த நாளை தவிர்த்து போலிசார் என்னை வேறு ஏதும் விசாரணை செய்தார்களா என்றால் புகார் கொடுத்த மறுநாள் என்னை விசாரணை செய்தனர். என்னை

காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தனர். எதிரிகள் நான், எனது கணவர், எனது மாமனார், எனது நாத்தனார் மற்றும் எனது நாத்தனார் கணவர் ஆறுமுகம் ஆகியோர்களுக்கு எதிராக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். அந்த வழக்கானது இந்த நீதிமன்றத்தில் CC.186/2024 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அது சரிதான்.

5. VAO விமல் மீது போலிசார் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் அது சரிதான். VAO விமலிற்கும் நடைபெற்ற சம்பவத்திற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலோ அவரது தூண்டுதலின் பேரில் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று சொன்னாலோ அது சரியல்ல. (நீதிமன்ற கேள்வி : VAO எதிரிகளுக்கு தகவல் கொடுத்தாரா? அல்லது பிரச்சனை செய்யுமாறு தூண்டினாரா? VAO தூண்டுதலின் பெயரில் தான் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வந்தனர்.)

6. எனது மாமனார் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் சொத்து தொடர்பான பிரச்சனை வெகு நாட்களாக உள்ளது என்றால் சரிதான். VAO அலுவலகத்தில் இரு தரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டு இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் அடித்து காயம் ஏற்படுத்தினர் என்றாலோ இரு தரப்பினருமே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றால் அது சரியல்ல. எங்களுக்குள் இருக்கும் நிலப்பிரச்சனை காரணமாக எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யான புகார் கொடுத்து அதற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. எதிரிகள் யாரும் என்னையோ, எனது நாத்தனாரையோ, எனது மாமனாரையோ, எனது கணவரையோ, எனது நாத்தனாரின் கணவரையோ தாக்கவில்லை என்றாலோ வாக்குவாதத்துடன் பிரச்சனை முடிந்தது என்றாலோ எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றாலோ அது சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd.Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.